முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அப்பூதியடிகள் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.11.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **குருவாக கலியுகத்தில் நின்று**
**குவலயம் காத்தருள வந்தநல்**
**ஆறுமுக அரங்கமகா தேசிகா**
**அண்ணலே உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி துலை திங்கள்**
**தெரியவே இருபானை திகதி கதிர்வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு அப்பூதியடிகளார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் நெறி போல்
ஞானவழிக்கு எளிய நெறிகள்
ஞாலமதில் வேறெங்கும் இல்லையப்பா
4. அப்பனே அரங்கனே என
அகிலமதில் நாமசெபம் கூறி
காப்பாயென வேண்டி வருக
கடைத்தேற்றம் உலகோர்க்கு உறுதி
5. உறுதிபட கடைகாலம் வரை
உயர்வை பெற வல்லமை கூட
அறமெனும் அன்னதான நெறி
அனைவரும் ஏற்று செய்வதுடன்
6. செய்வதுடன் சுத்த நெறியாம்
சிந்தை தெளிவிக்கும் வள்ளல் நெறி
மெய்ஞானம் தரும் அரங்கன் நெறி
முன்வந்து மக்களெல்லாம் ஏற்க
7. ஏற்கவே சாத்வீகம் பரவி
இன மத பேதம் கலகமிலா
அற்புதமான ஒரே சன்மார்க்கம்
ஆறுமுகனார் வழி மக்களிணைந்து
8. இணைந்து கலியுகம் தன்னில்
எல்லா இடர்களும் விலகி
துணைபட ஆறுமுகன் தயவுபட
தேற்றமருளும் ஞானயுகமாகும்
9. ஆகவே அற்புதம் நடத்திட
ஆறுமுக ஞானி அரங்கன் அமைத்த
யுகமாற்ற வேலைகள் எல்லாம்
உயர் சேவையாக பரவி வர

10. வருகவே அரங்கனை நோக்கி
வருமுலகில் வையகமே வணங்கி
முருகா என ஒப்புதல் தந்து
முழுமதி மற்றும் அனைத்து கால பூசை

11. பூசைகள் அனைத்திலும் கலந்து
பூவுலகோர் ஆசி அருள்பெற
நேசமுடன் முருகன் ஆளுமைபட
நீதியான ஞான ஆட்சி மலரும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

### மகான் அப்பூதியடிகள் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

எல்லையில்லா ஞானம் கொண்டு கலியுகத்தின் ஒப்பற்ற ஞானகுருவாக நின்று இவ்வுலகினை கலியுக துன்பங்களில் இருந்து மீட்டு ஞானயுகமாக ஆக்கி காத்தருள வந்திட்ட நல்ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அண்ணலே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே அப்பூதியடிகள் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அப்பூதியடிகள் நாயனார்.

உயர் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வகுத்த உயர்வான தூயநெறிபோல உலகினில் ஞானவழிக்கு எளிய நெறிகள் வேறெங்கும் இல்லையப்பா. இதுவரை இதுபோல் யாரும் ஞானத்தினை எளிமையாக சொன்னதும் இல்லையப்பா.

அப்பனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே என்றே உலகினில் மக்களெல்லாம் நாமஜெபம்தனை பயபக்தியுடன் கூறி அரங்கா எங்களை காப்பாய் என்றே மனம் உருகி வேண்டி வந்தால் வேண்டுவோர்க்கு ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளும் வாய்ப்பு உறுதியாக கிடைத்திடும். அவர்களது ஆயுள் முழுதும் வல்லமைகள் பெற்று உயர்வான வாழ்வை பெற்று வாழ்வர்.

உலகோர் வாழ்நாள் முழுதும் வல்லமையுடன் வாழ்ந்திட உயர்வாழ்வை வாழ்ந்திட அவரவரும் அன்னதானநெறியினை முழுமனதாய் ஏற்று பணிவுடன் செய்வதுடன் அரங்கன் கூறும் மரணமிலாப் பெருவாழ்வை தந்தருள வல்லதான கொல்லா நெறியாம் சுத்தநெறியினை அறிவை தெளிவிக்கும் வள்ளல் நெறியாம் சுத்தநெறியை, மெய்ஞானம் தந்தருளும் அரங்கன் நெறியாம் சுத்தநெறியினை மனமுவந்து ஏற்று கடைப்பிடித்திட வேண்டும்.

மக்கள் உறுதியுடன் சுத்தநெறியை கடைப்பிடித்திட உலகமெங்கும் சாத்வீகம் பரவி உலகினில் இன, மத, பேதம் நீங்கி கலகங்கள் ஏதும் இல்லாத அற்புதமான ஒரே சன்மார்க்கம் தோன்றி மக்களெல்லாம் சன்மார்க்க தலைவன் முருகப்பெருமானின் ஞானவழியில் ஒன்றிணைந்து உலகமே ஒன்றுபட்டு நிற்கும்.

உலகம் முருகப்பெருமானின் ஞானவழியில் செல்ல செல்ல, துன்பம்மிக்க கலியுகத்தின் துன்பம் எல்லாம் விலகி, அரங்கன் துணையுடன் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் தயவு பெருகி ஜென்மத்தைக் கடைத்தேற்றும் வல்லமைமிக்க ஞானயுகமாக கலியுகமும் மாறிடும்.

ஆதலினால் இவ்வுலகினில் விரைந்து அற்புதங்கள் நடந்திட வேண்டுமாயின் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியார் அமைத்திட்ட யுகமாற்ற தொண்டுகளெல்லாம் உலக மக்களிடத்து உயர்வான சேவையாக பரவிட வேண்டும். உலக மக்களிடம் அரங்கனின் யுகமாற்ற தொண்டுகள் பரவ பரவ வருமுலகில் அரங்கனை நோக்கி உலக மக்களெல்லாம் வருகை தந்து வணங்கி அரங்கனிடத்து முருகா முருகா என பணிந்து ஒப்புதல் தந்து பணிந்திடுவர்.

அரங்கன் திருவடி பணிந்து அரங்கன் செய்யும் பௌர்ணமி சிறப்பு ஞானபூஜைகளிலும் மற்றைய பூசைகளிலும் உலகோர் கலந்து அரங்கன் ஆசியையும் ஞானிகள் ஆசியையும் அருளையும் பெற்று வர நேசமுடன் இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஆட்சி உருவாகி உலகமெங்கும் நீதிநெறியான ஞானஆட்சியாக உருவாகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் அப்பூதியடிகள் நாயனார்.

–சுபம்–